# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 291 | 4 Pages | 24.5.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 291 | 4 பக்கங்கள் | 24.5.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பனி சிகரத்தில் நடைபெற்ற பிரமாண்ட திருமணம்



சுவிட்சர்லாந்த், மே.24

திருமணத்தை பற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவு இருக்கும். சிலர் தங்களது திருமணம் பிரமாண்டமாகவும், வித்தியாசமாகவும் நடைபெற வேண்டும் என நினைப்பார்கள். சிலர் எளிமையான முறையில் திருமணத்தை நடத்துவார்கள். தற்போது இணையத்தில் வைரலாகி வரும் ஒரு வீடியோவில் பனி சிகரத்தில் நடைபெற்ற பிரமாண்ட திருமண காட்சிகள் பயனர்களை ரசிக்க செய்கிறது.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஸ்னோ அல்பைன் சிகரங்களில் இந்த திருமணம் நடைபெற்றுள்ளது. 2,222 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள பனி சிகரத்தில் நடைபெற்ற இந்த திருமணத்தின் போது மணமக்கள் ஐஸ்கியூப்பில் இருந்து வெளிப்படும் காட்சிகள் மற்றும் வீடியோவின் பின்னணியில் இசை தொகுப்பு ஆகியவை பயனர்களை கவர்ந்துள்ளது. மணமக்களின் குடும்பத்தினர் மணமக்களை உற்சாகப்படுத்திய காட்சிகளும் அதில் உள்ளது. இந்த வீடியோ வைரலாகி 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விருப்பங்களை குவித்த நிலையில் பயனர்கள் பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

## கடும் விமர்சனம் எதிரொலி: சொகுசு கார் விபத்தில் 17 வயது சிறுவனுக்கு வழங்கப்பட்ட ஜாமின் ரத்து



மகாராஷ்டிரா, மே. 24

மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் 17 வயது சிறுவன் குடிபோதையில் சொகுசு காரை (Porsche car) அதிவேகமாக (150 கி.மீட்டர் வேகத்தில்) ஓட்டி வந்தபோது, அந்த கார் இரு சக்கர வாகனத்தில் மோதி இரண்டு ஐ.டி. ஊழியர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

குடிபோதையில் கார் ஓட்டிய அந்த சிறுவனை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 15 மணி நேரத்தில் சிறார் நீதி வாரியம் அவருக்கு ஜாமின் வழங்கியது. மேலும், சாலை விபத்து குறித்து 300 வார்த்தைகள் கொண்ட கட்டுரை எழுத உத்தரவிட்டது.

இதனால் கடும் விமர்சனம் எழுந்தது. குடிபோதையில் சொகுசு காரை ஓட்டி விபத்து ஏற்படுத்திய சிறுவனுக்கு 15 மணி நேரத்தில் ஜாமினா? என கடும் விமர்சனம் எழுந்தது. இதனால் சிறார் நீதி வாரியம் அந்த சிறுவனுக்கு வழங்கிய ஜாமினை ரத்து செய்துள்ளார். மேலும், சிறார் காண்காணிப்பு மையத்தில் ஜூன் 5ந்தேதி வரை அடைக்க உத்தரவிட்டுள்ளது.

வாரியத்தின் உத்தரவை மறுஆய்வு செய்யுமாறும், குற்றம் கொடூரமானதால் குற்றம் சாட்டப்பட்ட இளைஞனை வயது வந்தவராகக் கருதுவதற்கும் அனுமதி கோரி போலீசார் மீண்டும் வாரியத்தை அணுகினர். இதனைத் தொடர்ந்து சிறுவனின் ஜாமின் ரத்து செய்யப்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய 17 வயது சிறுவன் 25வது வயது வரை வாகனம் ஓட்டக் கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை மகாராஷ்டிரா போக்குவரத்து ஆணையர் விவேக் பிமான்வார் பிறப்பித்துள்ளார்.

அந்த சிறுவன் ஓட்டி வந்த சொகுசு காரான 'Porsche Taycan'க்கான நிரந்தர வாகனப் பதிவு கடந்த மார்ச் மாதம் முதல் நிலுவையில் உள்ளதாகவும், அதற்கான பதிவுக் கட்டணம் ரூ.1,758 உரிமையாளர் தரப்பில் செலுத்தப்படவில்லை என்றும் மாநில போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் பல்வேறு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியது, 150 கிலோ மீட்டர் வேகம், தற்காலிக வாகனப் பதிவு உள்ளிட்டவை இதில் அடங்கும். இந்த சொகுசு காரை அடுத்த 12 மாதங்களுக்கு எந்தவொரு வட்டார போக்குவரத்து அலுவலகத்திலும் பதிவு செய்ய முடியாது. விபத்து ஏற்படுத்திய 17 வயது சிறுவனின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

## பாராளுமன்ற தேர்தல்: அதிகாலை 4 மணிக்கு மெட்ரோ ரெயில் சேவை



புதுடெல்லி, மே. 24

பாராளுமன்ற தேர்தலில் இது வரை 5 கட்ட வாக்குப்பதிவு முடிந்துள்ளது. வரும் 25ம் தேதி ஆறாம் கட்ட வாக்குப்பதிவும், ஜூன் ஒன்றாம் தேதி 7வது கட்ட வாக்குப்பதிவும் நடைபெற உள்ளது.

தேர்தல் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில் பா.ஜ.க, காங்கிரஸ் கட்சிகள் தங்களின் பிரசாரத்தை தீவிரப்படுத்தி வருகின்றன.

இதற்கிடையே, வரும் 25ம் தேதி தலைநகர் டெல்லியில் ஆறாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்நிலையில், பாராளுமன்ற தேர்தல் அன்று டெல்லியில் மெட்ரோ ரெயில் சேவை அதிகாலை 4 மணிக்கு தொடங்கும் என மெட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், 30 நிமிடங்களுக்கு ஒரு ரெயில் என காலை 6 மணி வரை ரெயில்கள் இயங்கும். காலை 6 மணிக்குப் பிறகு வழக்கமான அட்டவணையின் கீழ் செயல்படும் எனவும் அறிவித்துள்ளது.

# 5 லட்சம் குடும்பங்களை மேம்படுத்தும் 'தாயுமானவர் திட்டம்' தமிழகம் முழுவதும் அடுத்த மாதம் தொடங்கப்படுகிறது

சென்னை, மே. 24

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் 'நான் முதல்வன் திட்டம்' உள்பட பல்வேறு புதிய திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் கடந்த பட்ஜெட் தொடரின் போது தமிழகத்தில் வறுமையை குறைக்கும் விதமாக முதல்வரின் தாயுமானவர் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2024– 25ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை அப்போது தாக்கல் செய்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு இந்த திட்டத்துக்காக ரூ.27,922 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது என்றும் அடுத்த 2 ஆண்டுகளில் இது ஏறக்குறைய 5 லட்சம் ஏழைக்குடும்பங்களை வறுமையில் இருந்து உயர்த்த இந்த திட்டம் உதவும் என்றும் தெரிவித்திருந்தார்.

தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல சமூக நல திட்டங்களால் வறுமையை குறைப்பதில் மிகச்சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டு வந்தாலும் தாயுமானவர் திட்டம் மூலம் மிகவும் வாடிய நிலையில் வசிக்கும் ஏழை குடும்பங்களை கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றம் அடைய செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த திட்டத்தை அடுத்த மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் வறுமையை குறைப்பதில் மிகச்சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. இதை அங்கீகரிக்கும் வகையில் மத்திய அரசின் 'நிதி ஆயோக்' சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் மக்களின் சதவீதம் தமிழகத்தில் 2.2 சதவீதம் மட்டுமே என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும் வாடிய நிலையில் வாழும் ஏழை குடும்பங்களை கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதற்காகவே முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதரவற்றோர், தனித்து வசிக்கும் முதியோர், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்பு குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் என சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்படுவார்கள்.

அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமின்றி, கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் போன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும். அரசிடம் உள்ள தரவுகள், கள ஆய்வு மக்கள் பங்கேற்புடன் கலந்துரையாடல், கிராம சபை ஆகியவற்றின் வழியாக மாநிலம் முழுவதும் மிகவும் ஏழ்மையில் உள்ள குடும்பங்கள் கண்டறியப்பட உள்ளது. இத்திட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பங்கேற்பு உறுதி செய்யப்படும். அது மட்டுமின்றி முதலமைச்சரின்தாயுமானவர்திட்டத்தில் ஏழை குடும்பங்களை எந்த அடிப்படையில் எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பது பற்றி ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு பயிற்சியும் அளிக்க இருக்கிறோம்.

அடுத்த மாதம் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வந்த பிறகு இந்த திட்டத்துக்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். அதன் பிறகு இந்த திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## சாலை விபத்தில் சிக்கிய சிறுவனுக்கு ஜோதி பவுண்டேஷன் நல உதவிகள் செய்தனர்





மயிலாடுதுறை, மே.24

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் பகுதியில் சென்ற வாரம் நடந்த சாலை விபத்தில் படுகாயம் அடைந்த ஏழ்மை நிலையில் உள்ள சிறுவன் தமிழரசன் அவர்களின் இரண்டு கால்களும் அறுவை சிகிச்சைக்குஅவர்களின்குடும்பத்தார்கள் ஜோதி அறக்கட்டளையின் நிர்வாகிகளை சந்தித்து உதவிகள் கேட்டனர்.

அது சமயம் பொறுப்பாளர்களை சந்தித்து அவர்களின் ஆலோசனைப்படி உதவிகள் செய்ய ஏற்பாடு செய்தனர் மேலும் அந்த தந்தை இழந்த சிறுவனுக்கு ஜோதி பவுண்டேஷன் தன்னார்வ தொண்டு நிறுவனம் துணை நிற்கும் என்று நிறுவனர் ஜோதி ராஜன் ஆறுதல் கூறி மருத்துவ செலவிற்கு தனது தொண்டு நிறுவனத்தின் மூலம் நிதி உதவி வழங்கினார்கள் நிகழ்வில் ஜோதி பவுண்டேஷன் பொறுப்பாளர்கள் ரோட்டரி சரவணன்.சுகுமார்குத்தாலம் இருசக்கர வாகன பழுதுபார்ப்போர் நலச்சங்கம் ஆனந்த் குத்தாலம் பகுதி பொறுப்பாளர் மேகநாதன் மற்றும் உடன் இருந்தனர்சிறுவனின்தாயார் உதவியைப் பெற்றுக் கொண்டு மன நநெகிழ்ச்சியுடன் ஜோதி பவுண்டேஷன் நிர்வாகிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்

## சிலந்தி அணை விவகாரம்: தமிழகத்தின் உரிமைகளை காக்க தவறிய தி.மு.க. அரசு – அ.தி.மு.க. கண்டனம்

சென்னை, மே.24

உண்மை நிலையை எடுத்துக்கூறும் எடப்பாடியாருக்கு பதில் அளிப்பதை விட்டுவிட்டு, வலியுறுத்த வேண்டிய இடத்தில் வலியுறுத்தாமல், நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டே தமிழகத்தின் உரிமைகளை காக்கத் தவறிய தி.மு.க. அரசின் நீர்வளத் துறை அமைச்சருக்கு கடும் கண்டனம் என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக மக்களின் நல்வாழ்வுக்காக ஆட்சியில் இருந்தபோதும், தற்போது எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டு வரும் நிலையிலும், கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளத்தோடு, தமிழகத்தின் நலனுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர். அதிமுக பொதுச் செயலாளர் 'புரட்சித் தமிழர்' அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவர்.

கபட நாடகம் ஆடுதல்; இரட்டை வேடம் போடுதல்; உண்ட வீட்டிற்கே துரோகம் செய்தல்; நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் இழைத்தல் போன்ற செயல்கள் ஆளும் திமுகவினருக்கு கைவந்த கலை என்பதை தமிழக மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். காவிரி பிரச்சினையாகட்டும்; மேகதாது அணை கட்டும் பிரச்சினையாகட்டும்; முல்லைப் பெரியாறு பிரச்சினையாகட்டும்; பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணைகட்டும்பிரச்சினையாகட்டும்; அண்டை மாநிலங்கள் தமிழகத்தை வஞ்சிக்கும்போது அதை தட்டிக் கேட்க கையாலாகாத தி.மு.க. ஆட்சியாளர்கள், தங்கள் சுயநலத்திற்காக கைகட்டி, வாய்பொத்தி மவுனமாக வலம் வருவதை எடப்பாடியார் அவ்வப்போது சுட்டிக்காட்டி வருகிறார்.

அதன்அடிப்படையில், கேரளஅரசு தற்போது அமராவதி ஆற்றுக்கு வரும் நீரை தடுக்கும் வகையில், கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் சிலந்தி ஆற்றில் தடுப்பணை கட்டுவதை இந்தநாடகக்கும்பல்அரசுவேடிக்கை பார்ப்பதை தோலுரித்துக் காட்டினார். உடனடியாக சட்டப்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தினார்.

தங்களுடைய கள்ளத்தன நடவடிக்கைகளை மக்கள் முன்பு எதிர்க்கட்சித் தலைவரால் தோலுரித்துக் காட்டியதை பொறுத்துக்கொள்ள முடியாத நீர்வளத் துறை அமைச்சர், வழக்கம் போல் பசப்பு வார்த்தைகளைப் பயன்படுத்தி அறிக்கை என்ற பெயரில் புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டுள்ளார்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு 5.2.2007ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்போது தமிழகத்தில் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி; அதில் பொதுப்பணித் துறை மந்திரியாக இருந்தவரும் இவரே. மத்திய அரசுகுன்றிய அரசு என்று வாய்ஜாலம் காட்டும் திமுகவும், காங்கிரஸ் கட்சியும் அப்போது மத்தியில் கூட்டாக ஆண்டது. அப்போது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட எந்த நடவடிக்கையும் எடுக்காமல், 2G ஸ்பெக்டரம் ஊழலில் 1 லட்சத்து 70 ஆயிரம் கோடி ஊழல் செய்வதில் கவனம் செலுத்தி, தமிழக விவசாயிகள் வயிற்றில் அடித்துவிட்டு, இன்று பகல் வேஷம் போடும் திமுகவைப் பார்த்து மக்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.

மறைந்த முன்னாள் அமைச்சர் ஜெயலலிதா 2011ல் ஆட்சிக்கு வந்த பின்பு, நெஞ்சுரத்துடன் சட்டப் போராட்டம் நடத்தியதன் காரணமாக, காவிரிநடுவர்மன்றத்தின்இறுதி ஆணை 19.2.2013 அன்று செயலாக்கத்திற்கு வந்தது. அதற்காக தஞ்சையில், அனைத்து விவசாயிகள் சார்பில் மாபெரும் விழா எடுக்கப்பட்டு, எங்கள் அம்மாவுக்கு 'பொன்னியின் செல்வி' என்ற பட்டம் வழங்கப்பட்டதை தமிழக மக்கள் மறக்கவில்லை.

ஜெயலலிதாவின் அரசு பல சட்டப் போராட்டங்களை நடத்தி சுப்ரீம் கோர்ட்டில் 16.2.2018ல் இறுதி ஆணையைப் பெற்று, அதன் அடிப்படையில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு செயலாக்கத் திட்டத்தை அரசிதழில் 1.6.2018 அன்று வெளியிட்டது. அதன் அடிப்படையில், 2023ல் காவிரியில் நமக்குரிய பங்கு நீரை பெறமுடியாத கையாலாகாத தி.மு.க. அரசின் நீர்வளத் துறை அமைச்சர் தனது அறிக்கையில் வாய் ஜாலம் காட்டி உள்ளார்.

வார்த்தை ஜாலங்களில் கில்லாடிகளான தி.மு.க. அரசின் மந்திரிகளில், தலையாய மந்திரியான துரைமுருகன், சிலந்தி ஆற்றில் தடுப்பணை கட்டும் பிரச்சினை முதல், காவிரிப் பிரச்சினை வரை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று போராடுவோம் என்று கூறி மக்களை முட்டாளாக்கப் பார்க்கிறார்.

திமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம், அண்டை மாநிலங்களான ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதும்; கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே அணை கட்ட முயற்சிப்பதும்; கேரள அரசு சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதும், தி.மு.க. அரசின் எதிர்ப்பே இல்லாமல் சுதந்திரமாக நடைபெறுவதை மக்கள் பார்த்துக்கொண்டுதான் உள்ளனர்.

தற்போது கேரளாவில் நடப்பது தி.மு.க.,வின் கூட்டணிக் கட்சியான கம்யூனிஸ்ட்கள் ஆட்சி. சிலந்தி ஆற்றின் குறுக்கேதடுப்பணைகட்டுவதை அனைத்து பத்திரிகைகளும், ஊடகங்களும் வெளிச்சம் போட்டுக் காட்டி வருகின்றன. இச்செய்திகளின் அடிப்படையில் கேரள அரசின் நடவடிக்கைக்கு பசுமைத் தீர்ப்பாயம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, இரு மாநில அரசுகளுக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

தங்கள் குடும்பத்தினர் நடத்தி வரும் தொழில்களுக்காகவும், சுயநலத்திற்காகவும், தமிழக மக்களின் நலனை அண்டை மாநிலங்களிடம் அடகு வைப்பதை இந்த 'நாடகமாடல் தி.மு.க. அரசு' கைவிட வேண்டும். காவிரி நீர் பிரச்சினை குறித்து ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது. சட்ட ரீதியான போராட்டம் நடத்தியும், தேர்தல் கூட்டணி அமைத்துள்ள அண்டை மாநில ஆட்சியாளர்களிடமும் வற்புறுத்தியும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதை விட்டுவிட்டு, தட்டிக்கழிக்கும் அறிக்கையை அமைச்சர் வெளியிடுவது, தமிழக மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும். அடுத்தவர்கள் மீது வீண் பழி சுமத்தி, தங்களை புனிதமானவர்களாகக் காட்டி மக்களைஏமாற்றலாம்என்றஎண்ணத்தை தி.மு.க. ஆட்சியாளர்கள் கைவிட்டு, பசுமைத் தீர்ப்பாயம் மற்றும் சட்டத்தின் மூலம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிமுக சார்பில் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரபல யூடியூபர் டி.டி.எப்.வாசனின் கடையில் போலீசார் சோதனை: என்ன நடந்தது..?

சென்னை, மே.24

பிரபல யூடியூபரான டி.டி.எப்.வாசன், சென்னை அம்பத்தூர் அயப்பாக்கம் மெயின் ரோடு, சுபாஷ் நகரில் வாகன உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார். இங்கு மோட்டார் சைக்கிள்களுக்கு ஜி.பி.எஸ். கருவி, அதிக ஒலி எழுப்பக்கூடிய சைலன்சர், ஹாரன் உள்ளிட்டவைகள் விற்கப்படுவதாகவும், இந்த கடைக்கு வருபவர்களால் அந்த பகுதியில் போக்குவரத்து நெரிசல்



ஏற்படுவதாகவும் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் டுவிட்டரில் புகார் கொடுத்து இருந்தார்.

அதன்பேரில் அம்பத்தூர் போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் பரந்தாமன் தலைமையிலான போலீசார் அந்த கடையில் சோதனை நடத்தினர். பின்னர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்கக்கூடாது.

மீறினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என கடையின் மேலாளர் ரபினா என்பவரை எச்சரித்த போலீசார், அவரிடம் எழுதி வாங்கி கொண்டனர்.


மேலும் இது குறித்து டி.டி.எப்.வாசனிடமும் செல்போன் மூலம் போலீசார் விளக்கம் கேட்டுள்ளனர்.

# ஆன்லைன் சூதாட்டத்தால் ரூ.50 லட்சம் கடன்: தனியார் நிறுவன ஊழியர் எடுத்த விபரீத முடிவு

கிருஷ்ணகிரி, மே.24

அரியலூர் மாவட்டம் கூவாகம் கிராமத்தை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவருடைய மகன் மணிவாசகன் (வயது 36). ஒசூர் 2வது சிப்காட் பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வந்தார். இவருடைய மனைவி அருணா. இவர்களுக்கு கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. 1½ வயதில் விசாகன் என்ற ஆண் குழந்தை உள்ளான். மணிவாசகன் தனது குடும்பத்தினருடன் ஒசூர் தோட்டகிரி பகுதியில் வசித்து வந்தார்.

மணிவாசகனுக்கு ஆன்லைன் சூதாட்டத்தில் அதிக ஈடுபாடு இருந்ததாக தெரிகிறது. அவர்



அதிக நேரம் ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது. இதில் அவர் ஏராளமான பணத்தை இழந்து அதிகளவில் கடன் வாங்கியதாகவும் தெரிகிறது.

இந்தநிலையில் ஊருக்கு சென்ற மனைவி அருணா நேற்று காலை தனது கணவருக்கு போன் செய்தார். ஆனால் அவர் போனை எடுத்து பேசாததால் அச்சமடைந்த அவர் அருகே வசிப்பவர்களுக்கு போன் செய்து தங்கள் வீட்டுக்கு சென்று பார்க்குமாறு கூறினார். பக்கத்து வீட்டில் வசிக்கும் மணிகண்டன் என்பவர் சென்று பார்த்த போது மணிவாசகன் வீட்டில் உள்ள அறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து உடனடியாக மணிவாசகத்தின் மனைவி, ஒசூர் அட்கோ போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று மணிவாசகனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஒசூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அப்போது வீட்டில் உள்ள ஒரு மேஜையில் மணிவாசகன் தனது குடும்பத்தினருக்கு எழுதிய உருக்கமான கடிதத்தை போலீசார் கைப்பற்றினர். அதில் நான் ஆன்லைன் சூதாட்டத்தில் ஏராளமான பணத்தை இழந்து விட்டேன். மேலும் ரூ.50 லட்சம் வரை கடன் உள்ளது. கடனை திருப்பி செலுத்த முடியாததால் தற்கொலை செய்து கொள்கிறேன் என்று அந்த கடிதத்தில் எழுதி வைத்திருந்ததாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை மாநகராட்சியில் தூர்வாரும் பணிகள் தொடக்கம் 15 மண்டலங்களுக்கும் தலா ரூ.50 லட்சம் ஒதுக்கீடு

சென்னை, மே. 24

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த வரலாறு காணாத கனமழையால் குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்து பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். இந்நிலையில் இந்த ஆண்டு மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக சென்னையில் கால்வாய்களை தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

இதன்படி தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் நோக்கில் சென்னை மாநகராட்சிக்




குட்பட்ட கால்வாய்கள் நீர்நிலைகள் மற்றும் மழைநீர்வடிகால்களை தூர்வாரும் பணிகள், ஆகாயத்தாமரையை அகற்றி தயார்படுத்தும் பணிகளை சென்னை மாநகராட்சி துவங்கியுள்ளது.

இதற்காக 15 மண்டலங்களுக்கும் தலா 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெளி நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஓட்டேரி நல்லான், விருகம்பாக்கம் கால்வாய், மாம்பலம் கால்வாய், ராஜ் பவன் கால்வாய், பக்கிங்காம் கால்வாய், அடையாறு மற்றும் கூவம் ஆறுகளிலும் ஆகாயத்தாமரை அகற்றி தூர்வரும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் நடைபெற உள்ளன.

முதல் கட்டமாக ஜூன் 30ந்தேதிக்குள் பணிகள் முடிக்கப்படும் என்றும், தென்மேற்கு பருவமழைக்குப் பிறகு வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள ஏதுவாக மீண்டும் தூர்வாரும் பணிகள் துவங்கப்பட்டு அக்டோபருக்குள் முடிக்கப்படும் எனவும் மாநகராட்சி அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

# 6 மாதங்கள் உல்லாசம்: இளம்பெண்ணின் காமவலையில் வீழ்ந்த மத்திய அரசு ஊழியர்... வீழ்ந்தது எப்படி? பரபரப்பு தகவல்

சென்னை, மே.24

சென்னை திருமுல்லைவாயில் பகுதியை சேர்ந்தவர் வெங்கடேசன் (வயது 59) இவர் மத்திய அரசு அலுவலகத்தில் செயற்பொறியாளராக பணியாற்றி வருகிறார். இவர் காரைக்கால் மாவட்டம், திருநள்ளாறு சாலையில் உள்ள குடியிருப்பு வளாகத்தில் வீடு எடுத்து தங்கியுள்ளார். இந்நிலையில், இவருக்கும் மயிலாடுதுறை சீனிவாசபுரம் கம்பர் தெருவை சேர்ந்த திருமணமான பெண்ணான சுபாஷினி (40) என்பவருக்கும் புரோக்கர் மூலம் தொடர்பு ஏற்பட்டது. அந்ததொடர்பு நாளடைவில் திருமணம் கடந்த உறவாக மாறியது, பின்னர் இருவரும் கடந்த 6 மாதங்களாக தனிமையில் உல்லாசம் அனுபவித்து வந்துள்ளனர்.

இதற்காக ஒவ்வொரு முறை சுபாஷனி காரைக்காலுக்கு செல்லும்போதும் குடும்ப வறுமையை காரணம் காட்டி வெங்கடேசிடம் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக பணம் பெற்று வந்துள்ளார். வேங்கடேசும் சுபாஷினியின் கண்ணீருக்கு பின்னால் குடும்ப வறுமை தானே உள்ளது என அவர் கேட்ட போதேல்லாம் பணம் கொடுத்துள்ளார். இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள சுபாஷினி திட்டமிடுகிறார். அதன்



படி கடந்த மாதம் 27ம் தேதி எப்போதும் சந்திப்பது போன்று சுபாஷினி காரைக்காலுக்கு சென்றுள்ளார். அப்போது வழக்கம் போல் இருவரும் தனிமையில் உல்லாசமாக இருந்துள்ளனர். இதனை வெங்கடேசனுக்கு தெரியாமல் சுபாஷினி தனது "செல்போனில் வீடியோ எடுத்துள்ளார். அதனை தொடர்ந்து, எதுவுமே தெரியாதது போல் மயிலாடுதுறைக்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

பின்னர், கடந்த மாதம் (ஏப்ரல்) 20ந்தேதி வெங்கடேசனை மயிலாடுதுறை காவேரி நகர் பகுதியில் உள்ள தனியார் விடுதிக்கு வருமாறு அழைத்துள்ளார். அவரும் சுபாஷினியின் பேச்சை கேட்டு வந்துள்ளார். அதே வேளையில் சுபாஷினியோ, மூவேந்தர் முன்னேற்ற கழகத்தின் மாநில இளைஞரணி செயலாளரான மயிலாடுதுறையை சேர்ந்த பிரகாஷ் (40) என்பவரை விடுதிக்கு வருமாறு அழைத்துள்ளார். அவர் தனது கூட்டாளிகளான முகமது நசீர் (39), தினேஷ் பாபு (31) ஆகியோருடன் வந்துள்ளார்.

பின்னர், சுபாஷினியுடன் இணைந்து வெங்கடேசனின் கழுத்தில் கத்தியை வைத்து பணம் கேட்டு மிரட்டியதாக கூறப்படுகிறது.

மேலும் அவரிடம் இருந்து ஏடிஎம் கார்டை பிடிங்கியதுடன் ஆன்லைன் வாயிலாக ரூ.2.70 லட்சம் பணத்தையும் பறித்துள்ளனர். அதோடு மட்டுமில்லாமல் நீ சுபாஷினியுடன் தனிமையில் இருந்த வீடியோ எங்களிடம் உள்ளது. அதனை வெளியிடாமல் இருக்க வேண்டும் என்றால் கூடுதலாக ரூ.10 லட்சம் தர வேண்டும் என கூறி மிரட்டி வெங்கடேசனை அங்கிருந்து அனுப்பி உள்ளனர். இதனால் என்ன செய்வது என தெரியாமல் தவித்து வெங்கடேசன் இதுகுறித்து நேற்று காலை மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதையடுத்து போலீசார் விரைந்து செயல்பட்டு சுபாஷினி, மூமுக மாநில இளைஞரணி செயலாளர் கில்லி பிரகாஷ் மற்றும் அவரது கூட்டாளிகள் முகமது நசீர், தினேஷ் பாபு ஆகிய 4 பேரையும் கைது செய்தனர். பின்னர், அவர்களை மயிலாடுதுறை கோர்ட்டில் ஆஜர்படுத்தி கூட்டாளிகள் 3 பேரையும் மயிலாடுதுறை கிளை சிறையிலும் சுபாஷினியை திருவாரூர் சிறையிலும் அடைந்தனர்.

புரோக்கர் மூலம் திருமணமான பெண்ணுடன் பழகி, அவர் விரித்த காம வலையில் சிக்கி மத்திய அரசு ஊழியர் லட்சக்கணக்கில் பணம் இழந்த சம்பவம் அனைவரின் மத்தியிலும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# அய்யாக்கண்ணு கைது செல்போன் கோபுரத்தில் ஏறி விவசாயிகள் போராட்டம்: அய்யாக்கண்ணு கைது

திருச்சி, மே.24

விவசாயிகளின் விளை பொருள்களுக்கு இரட்டிப்பு லாபம் தரப்படும், விவசாயிகள் வாங்கி உள்ள கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாத, மத்திய மாநில அரசுகளை கண்டித்து, சென்னை தலைமைச் செயலகம் முன்பாக தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்ய முடிவு செய்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று இரவு திருச்சி கரூர் பைபாஸ் சாலையில் உள்ள தேசிய தென்னிந்திய விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் அய்யாக்கண்ணு மற்றும் விவசாயிகள் 9 பேரை போலீசார் வீட்டுக்காவலில் வைத்தனர். இந்நிலையில் இன்று காலை 7 மணி அளவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் அய்யாக்கண்ணு உள்ளிட்ட 9 பேரை போலீசார் கைது செய்து உறையூர் பகுதியில் உள்ள திருமண மண்டபத்திற்கு அழைத்து சென்றனர்.

இதைத்தொடர்ந்து அய்யாக்கண்ணு கைது செய்ததை கண்டித்து உறையூர் பகுதியில் உள்ள தனியார்



மருத்துவமனை முன்பு விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அவர்களை உறையூர் போலீசார் அப்புறப்படுத்தினர். பின்னர் அங்கிருந்த விவசாயிகள் 3 பேர் அந்த பகுதியில் இருந்த வணிக வளாகத்தின் மேலிருந்த செல்போன் கோபுரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் இதுகுறித்து கண்டோன்மெண்ட் தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு வீரர்கள் செல்போன் கோபுரத்தில் ஏறிய விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது விவசாயிகள் அய்யாக்கண்ணுவை விடுவித்தால் மட்டுமே கீழே இறங்கி வருவோம். இல்லையென்றால் கீழே குதித்து விடுவோம் என மிரட்டல் விடுத்தனர்.

இதை தொடர்ந்து உறையூர் போலீசார் மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் செல்போன் கோபுரத்தில் ஏறிய விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதையடுத்து சிறிது நேரம் கழித்து அய்யாக்கண்ணு நேரில் வரவழைக்கப்பட்டு, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதையடுத்து விவசாயிகள் தனபால், தமிழ்செல்வன், ராமசந்திரன் ஆகிய 3 பேரும் பத்திரமாக கீழே இறங்கி வந்தனர். பின்னர் அவர்கள் 3 பேரையும் உறையூர் போலீசார் கைது செய்தனர்.

# காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கருட சேவை உற்சவத்தில் தவறி கீழே விழுந்த குடை: பக்தர்கள் கலக்கம்



காஞ்சிபுரம், மே.24

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் திருக்கோவில் வைகாசி பிரம்மோற்சவத்தை ஒட்டி மூன்றாம் நாளான இன்று தங்க கருட சேவை உற்சவம் நடைபெற்றது. தங்க கருட வாகனத்தில் எழுந்தருளிய வரதராஜ பெருமாளுக்கு இருபுறமும் திருக்குடைகளை கோவில் பட்டாச்சாரியார்கள் பிடிக்கும் நிலையில் சுவாமியை சுமந்து செல்லும் பாதம் தாங்கிகள் அவ்வப்போது கருட வாகனத்தை குலுக்குவது வழக்கம்.

அந்த வகையில் பாதம் தாங்கிகள் தங்க கருட வாகனத்தை குலுக்கிய போது திருக்குடைளை பிடிக்க முடியாமல் கோவில் பட்டாச்சாரியார்கள் தவறவிட்டனர். கருட சேவை வீதி உலாவின் போது செட்டி தெரு, திருகச்சி நம்பி தெரு, கச்சபேஸ்வரர் கோவில் சந்திப்பு ஆகிய இடங்களில் திருக்குடைகள் சரிந்து விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட நிலையில் கருட சேவை உற்சவத்தில் திருக்குடைகள் சரிந்து விழுந்த சம்பவத்தால் ஏதேனும் தீங்கு நேருமோ என பக்தர்கள் கலக்கம் அடைந்து உள்ளனர்.

# திருவொற்றியூர்: கருட சேவையில் சரிந்த பெருமாள் சிலை... பக்தர்கள் அதிர்ச்சி

சென்னை, மே.24

சென்னை திருவொற்றியூர் கல்யாண வரதராஜர் பெருமாள் கோவிலில் கருட சேவை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

பவள வண்ண பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் கருட வாகனத்தில் எழுந்தருளினார்.

கருட சேவை நிகழ்ச்சியின்போது பல்லக்கை தூக்கியபோது அதன் தண்டு உடைந்து




பெருமாள் சிலை கீழே சரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பெருமாள் சிலை சரிந்ததால் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதில் பட்டாச்சாரியார் முரளி என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

பெருமாள் சிலை சரிந்ததும் உடனடியாக கோவில் வாசல் மூடப்பட்டது. சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு மீண்டும் வாசல் கதவு திறக்கப்பட்டது. மீண்டும் கருட வாகனத்தில் எழுந்தருளி பெருமாள் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

# 4 பேருடன் சேர்ந்து கணவர் என்னை பலாத்காரம் செய்தார் பழிவாங்குவதற்காக பொய் புகார் அளித்த பெண்

சென்னை, மே.24

சென்னை அடுத்த கேளம்பாக்கம் காவல் நிலையத்துக்கு வந்த பெண் ஒருவர், 4 பேருடன் சேர்ந்து கணவர் தன்னை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக அதிர்ச்சி புகார் ஒன்றை அளித்தார். மனுவை பெற்றுக் கொண்ட போலீசார், அந்த பெண்ணிடம் கேட்ட கேள்விகளுக்கு முன்னுக்கு பின் முரணாக பதிலளித்ததால் அவர் மீது போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து போலீசார்




நடத்திய கிடுக்கிப்பிடி விசாரணையில் கணவனை பழிவாங்க பொய் புகார் கொடுத்ததாக அந்த பெண் மன்னிப்பு கேட்டுள்ளார்.

கணவன் தினமும் குடித்து விட்டு வந்து அடித்து உதைத்ததால் அவரைபிரிந்துவாழ்ந்து வருவதாகவும், ஆனால் அடிக்கடி அழைத்து தொல்லை கொடுத்ததால் அவரைபழிவாங்க இதுபோன்று பொய் புகார் கொடுத்ததாகவும் போலீசாரிடம் அந்த பெண் தெரிவித்துள்ளார்.

காவல் நிலையத்தில் மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்ததை தொடர்ந்து போலீசார் அந்த பெண்ணை எச்சரித்து அனுப்பி வைத்தனர்.

# ஓட, ஓட விரட்டி வாலிபர் வெட்டிக் கொலை: தென்காசியில் பயங்கரம்

தென்காசி, மே.24

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அடுத்த ஊத்துமலை அருகே உள்ள கீழக்கலங்கல் இந்திரா காலனியைச் சேர்ந்தவர் நடராஜன் மகன் கனகராஜ் (வயது 26). கூலித் தொழிலாளியான இவர் வழக்கம் போல் வேலைக்கு சென்று விட்டு நேற்று இரவு வீட்டின் முற்றத்தில் அமர்ந்து இருந்தார்.

அப்போது வீட்டின் பின்புறம் இருந்து பயங்கர ஆயுதங்களுடன் மர்ம கும்பல் வந்தது. அதை பார்த்த கனகராஜ் அங்கிருந்து ஓடினார். எனினும் அவரை ஓட, ஓட விரட்டிய அந்த கும்பல் அரிவாளால் சரமாரியாக வெட்டியது.

அவரது சத்தம் கேட்டு அவரது தந்தை நடராஜன் வெளியே ஓடிவந்தார். அவரையும் அந்த கும்பல் வெட்டியது. இந்த வெறிச்செயலில் ஈடுபட்ட மர்மகும்பல் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டது. அரிவாள் வெட்டு விழுந்த கனகராஜ் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். நடராஜன் படுகாயங்களுடன் கிடந்தார்.

இதுகுறித்து உடனடியாக ஊத்துமலை போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றுகனகராஜ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சங்கரன்கோவில் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். படுகாயம் அடைந்த நடராஜனும் ஆம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரிக்குகொண்டு செல்லப்பட்டார்.

முன்விரோதத்தில் பழிக்குப்பழியாக இந்த கொலை நடந்ததா? அல்லது வேறு ஏதாவது காரணம் உள்ளதா? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மேலும், இந்த பயங்கர கொலை குறித்து வழக்குப்பதிவு செய்து தப்பிச் சென்ற மர்ம கும்பலை வலைவீசி தேடிவருகிறார்கள்.

ஊத்துமலை அருகே இரவில் வாலிபர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மோட்டார் சைக்கிள் கேட்ட மகன்... பிறந்தநாளுக்கு வாங்கி தருவதாக கூறிய பெற்றோர்... அடுத்து நடந்த விபரீதம்

திருப்பத்தூர், மே.24

திருப்பத்தூர் மாவட்டம் கேத்தாண்டப்பட்டி வாணியம்பாடி ரெயில் நிலையங்களுக்கு இடையே உள்ள புத்துக் கோவில் ரெயில்வே மேம்பால பகுதியில் சுமார் 24 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு ரெயிலில் அடிபட்டு இறந்து கிடந்தார். இது குறித்து தகவல் அறிந்த ஜோலார்பேட்டை ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று வாலிபரின் உடலை மீட்டு விசாரணை மேற்கொண்டனர்.



அதில் அவர் வாணியம்பாடி அருகே உள்ள பெத்த கல்லுப்பள்ளி ஊராட்சி, போயர் காலனி பகுதியை சேர்ந்த பழனி என்பவரின் மகன் ஜெயபிரகாஷ் (வயது 24) என்பது தெரிய வந்தது. மேலும் இவரது குடும்பத்தினர் பல வருடங்களாக பெங்களூரு வில் வசித்து வேலை செய்து வருகின்றனர். ஜெயபிரகாஷ் பெங்களூரு வில் உள்ள ஒரு கல்லூரியில் எம்.பி.ஏ. முதலாம் ஆண்டு படித்து வந்துள்ளார்.

கல்லூரிக்கு சென்று வருவதற்கு மோட்டார் சைக்கிள் (புல்லட்) வாங்கித்தருமாறு பெற்றோரிடம் கேட்டு வந்துள்ளார். இதற்கு, ''உன்னுடைய பிறந்தநாளுக்கு வாங்கித் தருகிறோம்'' என்று பெற்றோர் கூறியதாக தெரிகிறது. நேற்று முன்தினம் காலை வீட்டில் இருந்து கல்லூரிக்கு சென்று வருவதாக கூறிவிட்டு சென்றவர் வீடு திரும்பவில்லை. கல்லூரிக்கும் செல்லவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் பெங்களூருவில் இருந்து சொந்த ஊருக்கு வந்த ஜெயப்பிரகாஷ் வீட்டின் அருகே உள்ள ரெயில்வே மேம்பாலம் தண்டவாளபகுதியில் அந்தவழியாக வந்த ஏதோ ஒரு ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டது விசாரணையில் தெரியவந்தது. இதனையடுத்து ரெயில்வே போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மோட்டார்சைக்கிள் வாங்கிக்கொடுக்காததால் ரெயில் முன் பாய்ந்து கல்லூரி மாணவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பெட்ரோல் ஊற்றி தீ வைத்த சம்பவம்: காதலன் இறந்த 8வது நாளில் காதலியும் சாவு

மயிலாடுதுறை, மே.24

மயிலாடுதுறை டவுன் ஸ்டேஷன் தெற்கு தெருவை சேர்ந்தவர் ராமமூர்த்தி மகன் ஆகாஷ்(வயது 24). பூம்புகார் கல்லூரியில் பி.காம் 3ம் ஆண்டு படித்து வந்தார். கடலூர் மாவட்டம் புவனகிரியை சேர்ந்த நாகப்பன் மகள் சிந்துஜா(22). இவர் மயிலாடுதுறையில் உள்ள அரசு மகளிர் கல்லூரியில் பி.ஏ. 2ம் ஆண்டு படித்து வந்தார்.

ஆகாசும், சிந்துஜாவும் காதலித்து வந்துள்ளனர். இந்த நிலையில் ஆகாஷ் வேறு ஒரு பெண்ணுடம் பழகியதால் சிந்துஜாவிடம் பேசுவதையும், சந்திப்பதையும் தவிர்த்து வந்துள்ளார். இந்தநிலையில் கடந்த 9ம் தேதி பூம்புகார் கடற்கரை பகுதியில் ஆகாஷ், சிந்துஜா இருவரும் சந்தித்து பேசியுள்ளனர்.

பின்னர் 2 பேரும் ஒரேமோட்டார்சைக்கிளில் மயிலாடுதுறை வந்துள்ளனர். மயிலாடுதுறை காவிரி பாலக் கரை என்ற இடத்தில் வந்தபோது ஆகாஷ் தன்னை தொடர்ந்து காதலிக்க மறுத்ததால் மனம் உடைந்த சிந்துஜா தான் மறைத்து வைத்திருந்த பெட்ரோலை ஆகாஷ் மீதும், தன் மீதும் ஊற்றிக் கொண்டு தீ வைத்துக் கொண்டுள்ளார்.



அந்த தீ இருவர் மீதும் பற்றி எரிந்துள்ளது. பலத்த தீ காயங்களுடன் உயிருக்கு போராடிய இருவரையும் அருகில் இருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஆகாஷ் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கும், சிந்துஜா தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் கடந்த 14ந் தேதி ஆகாஷ் உயிரிழந்தார். சிந்துஜாவிற்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இதுகுறித்து மயிலாடுதுறை போலீசார் சிகிச்சைபெற்று வந்த காதலி சிந்துஜா மீது கொலை வழக்குப்பதிவு செய்தனர்.

இந்தநிலையில் தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பெற்று வந்த சிந்துஜா நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். தொடர்ந்து சிந்துஜாவின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. தன் மீதும், காதலன் மீதும் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துக் கொண்டு காதலன் இறந்த நிலையில் காதலியும் இறந்து போன சம்பவம் மயிலாடுதுறை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கீழ்ப்பாக்கத்தில் ரூ.35 கோடி செலவில் 6 மாடியில் 239 படுக்கைகளுடன் நவீன புதிய மனநல காப்பகம்

சென்னை, மே. 24

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற வருபவர்களுக்குச் சிறந்த மருத்துவச் சேவையை வழங்குவதற்கான நவீன உபகரணங்களுடன் கூடிய புதிய மனநல மற்றும் நரம்பியல் நிலையத்திற்கான ஒப்புயர்வு மையக் கட்டிடம் ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேரவையில் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 30.3.2023 அன்று ரூபாய் 35 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக 24.8.2023 அன்று இக்கட்டிடத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.




புதிய மருத்துவமனைக் கட்டிடம் மொத்தம் 88,039 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் 239 படுக்கை வசதிகளுடன் உலகத் தரத்தில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. தரைத்தளத்தில் கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, மனநலப் புறநோயாளிகள் பிரிவு நரம்பியல் புறநோயாளிகள் பிரிவு; முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் மூப்பியல் பிரிவு, நரம்பியல் புற நோயாளிகள் பிரிவு, அறிவாற்றல் பழகுமுறை மற்றும் குழந்தைகள் ஆலோசனை அறை போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் தளம் உள்நோயாளிகள் பிரிவு, புலன் உணர்வு அறை, அடிமைத் தன்மை மீட்பு ஆலோசனை அறை, போன்ற வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

4ம் மற்றும் 5ம் தளங்கள் நரம்பியல் பிரிவு மற்றும் குழந்தைகள் பிரிவு போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. 6ம் தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள் போன்ற வசதிகளும் இடம்பெறும்.

இக்கட்டிடத்தின் அனைத்துத் தளங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பிடம், பொதுக் கழிப்பிடம், இரண்டு மின் தூக்கிகள், இரண்டு படிக்கட்டுகள், சாய்வு தளம், மருத்துவதிரவ ஆக்சிஜன் இணைப்புகள், தீயணைப்பு உபகரணங்கள் போன்ற அனைத்து வசதிகளும் இடம்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் கட்டமைப்புகளை மேம்படுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி பொதுப்பணித்துறையின் மூலம் தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 4,821 கோடியே 55 லட்சம் ரூபாய்ச் செலவில் 941 மருத்துவ துறைச் சார்ந்த புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமல்லாமல் மருத்துவத் துறையில் மேலும் பல்வேறு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குமரியில் தொடர்ந்து கடல் சீற்றம்: கடற்கரை பகுதிகள் வெறிச்சோடின

நாகர்கோவில், மே. 24

தென்கிழக்கு வங்கக்கடலில் புயல் சின்னம் இன்று காலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக குமரி மாவட்டத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கன்னியாகுமரி முதல் நீரோடி வரை உள்ள கடற்கரை கிராமங்களில் இன்று காலை முதலே கனமழை பெய்து வருகிறது. கன்னியாகுமரியில் இன்று மதியம் சூறைக்காற்றுடன் மழை பெய்தது. இதனால் கடற்கரையில் இருந்த சுற்றுலாப் பயணிகள் ஓட்டம் பிடித்தனர். சில சுற்றுலா பயணிகள் குடை பிடித்தவாறு கடல் அழகை ரசித்தனர். அப்போது குடையை சூறைக்காற்று தூக்கி சென்றது.

மேலும் அந்த பகுதியில் கடல் சீற்றத்துடனும் காணப்பட்டது. ராட்சத அலைகள் 10 முதல் 15 அடி உயரத்திற்கு எழும்பின. இதையடுத்து சுற்றுலா பயணிகள் அங்கிருந்துவெளியேறினார்கள். முட்டம் , ராஜாக்கமங்கலம் துறை, நீரோடி, குளச்சல், தேங்காய்பட்டினம், சொத்தவிளை உள்ளிட்ட அனைத்து மீனவ கிராமங்களிலும் இன்று கடல் சீற்றமாக காணப்பட்டது. மழையும் விட்டுவிட்டு பெய்தவாறு இருந்தது.

ஏற்கனவே மீனவர்கள் கடலுக்கு செல்லக்கூடாது என்று மீன்வளத்துறை எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் பெரும்பாலான மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. மீனவர்கள் தங்களது படகுகளை பாதுகாப்பான இடங்களில் நிறுத்தி வைத்திருந்தனர். மீனவர்கள் கடலுக்கு செல்லாதால் கடற்கரை கிராமங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. குமரி மாவட்டத்தில் கனமழையுடன் சூறைக்காற்றும் நீடிப்பதால் பொதுமக்கள் யாரும் நீர்நிலைகள் அருகே செல்ல வேண்டாம் என்றும், நீர்நிலைகள் பகுதிகளில் நின்று செல்பி எடுக்க வேண்டாம் என்றும் கலெக்டர் ஸ்ரீதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நெல்லை குடியிருப்புப் பகுதியில் 3வது சிறுத்தை சிக்கியது

நெல்லை, மே.24

நெல்லை மாவட்டம் பாபநாசம் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள வேம்பையாபுரம் பகுதியைச் சேர்ந்த சங்கர் என்பவரது வீட்டில் கட்டிப் போட்டிருந்த ஆட்டை, வனப்பகுதியில் இருந்து இறங்கிய சிறுத்தை வேட்டையாடி தூக்கிச் சென்றது. இதேபோல் விக்கிரமசிங்கபுரம் அருகே அனவன்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த பேச்சிமுத்து என்பவரது வீட்டில் இருந்த ஆட்டையும் சிறுத்தை கடித்து தாக்கியது.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் பாபநாசம் வனச்சரகர் சத்தியவேல் தலைமையிலான வனத்துறையினர் தீவிரஆய்வுசெய்து, இரு பகுதிகளிலும் மோப்பநாய் 'நெஸ்' மூலமாக மோப்பம் பிடித்து சிறுத்தை வந்த வழியாக பின்தொடர்ந்து சென்றனர். பின்னர் சிறுத்தையை பிடிக்க இரும்புக்கூண்டு வைக்கும் இடத்தை தேர்வு செய்தனர்.



அதன்படி வேம்பையாபுரம், அனவன்குடியிருப்பு பகுதிகளில் நடமாடிய சிறுத்தையை பிடிப்பதற்காக, அங்கு இரும்புக்கூண்டுகளை வைத்து வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். கடந்த 19ந்தேதி வனத்துறையினர் வைத்த கூண்டில் ஒரு சிறுத்தை சிக்கியது.

இந்த நிலையில் அனவன்குடியிருப்பு பகுதியில் வைக்கப்பட்ட கூண்டில் நேற்றிரவு பெண் சிறுத்தை ஒன்று சிக்கியது. இதைத் தொடர்ந்து, வேம்பையாபுரம் பகுதியில் வைக்கப்பட்டிருந்த கூண்டில் இன்று மேலும் ஒரு சிறுத்தை சிக்கியுள்ளது. வனத்துறை வைத்த கூண்டுகளில் ஒரே வாரத்தில் அடுத்தடுத்து 3 சிறுத்தைகள் சிக்கியுள்ளன. பிடிபட்ட சிறுத்தைகள் அடர் வனப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட உள்ளதாக வனத்துறையினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

# ஆபத்தான சாலையால் வாகன ஓட்டிகள் அச்சம்: சீரமைக்க கோரிக்கை

ஊத்துக்கோட்டை, மே. 24

ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாமரைக் குப்பம் கிராமத்தில் இருந்து முஸ்லிம்நகர் வழியாக ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்படும் கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லையில் வந்தடையும் பாயிண்ட் பகுதி வரை சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்துக்கு சாலை உள்ளது. இந்த சாலை வழியாகத்தான் மதனஞ்சேரி, தொண்டுகுழி, கண்டிகை ஆகிய கிராமங்களுக்கு வாகன போக்குவரத்து நடைபெற்று வருகிறது.



மேலும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஊத்துக்கோட்டையில்இருந்து ஜீரோ பாயிண்ட்டுக்கு இந்த சாலை வழியாகத் தான் அடிக்கடி சென்று வருகின்றனர். இந்த நிலையில் கடந்த ஆண்டு உங்களில் வங்கக்கடலில் ஏற்பட்ட மிச்சாங் புயல் காரணமாககனமழை கொட்டி தீர்த்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இதில் தாமரைக்குப்பம் ஊராட்சிக்கு உட்பட்ட முஸ்லிம் நகர் அருகே சாலையில் அரிப்பு ஏற்பட்டு மெகா பள்ளம் ஏற்பட்டது. மேலும் தாமரைகுப்பம் ஜீரோபாயிண்ட் இடையே சாலையும் குண்டும் குழியுமாக மாறியது. இந்த சாலை இதுவரை சீரமைக்கப்படாமல் ஒத்தையடி சாலையாக மாறிவிட்டது. மேலும் மண் அரிப்பு ஏற்பட்ட இடம் ஆபத்தான நிலையில் மெகா பள்ளமாக காட்சி அளிக்கிறது. இது இன்னும் மூடப்படாமல் உள்ளதால் வாகன ஓட்டிகள் இந்த சாலையில் செல்லவே அச்சம் அடைந்து வருகிறார்கள். மேலும் பள்ளத்தில் இருசக்கர வாகனஓட்டிகள் அடிக்கடி விழுந்து விபத்துக்கள் ஏற்படுகின்றன. இரவு நேரத்தில் இந்த வழியாக செல்லவே வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் அஞ்சும் நிலை ஏற்பட்டு உள்ளது.

எனவே தாமரைக்குப்பம் ஜீரோபாயிண்ட் இடையே குண்டும் குழியுமாக மாறிய சாலையை சீரமைத்து மெகா பள்ளத்தை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாமரைகுப்பம் மற்றும் முஸ்லிம் நகர் பொதுமக்கள்கோரிக்கைவிடுத்து உள்ளனர். இது தொடர்பாக எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தும் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

# அரசு பஸ்சில் டிக்கெட் எடுக்க மறுத்து கண்டக்டருடன் போலீஸ்காரர் வாக்குவாதம் வீடியோ



நெல்லை, மே. 24

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் இருந்து நாங்குநேரி, நெல்லை வழியாக தூத்துக்குடிக்கு அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது.

நேற்று அந்த பஸ் நாங்குநேரி நீதிமன்றம் முன்பு உள்ள நிறுத்தத்தில் நின்றபோது அங்கு நின்று கொண்டிருந்த ஒரு போலீஸ்காரர் அந்த பஸ்சில் ஏறி உள்ளார். இதனை அடுத்து பஸ் கண்டக்டர் அந்த போலீஸ்காரரிடம் டிக்கெட் கேட்டுள்ளார்.

அப்போது அந்த போலீஸ்காரர் அரசு பஸ்சில் அரசு பணியில் உள்ளவர்கள் எல்லாருக்குமே டிக்கெட் கிடையாது. நாங்களும் அரசு வேலை பார்ப்பவர்கள் தான். எங்களுக்கும் டிக்கெட் கிடையாது என கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனைத் தொடர்ந்து அரசு பஸ்சில் போலீஸ்காரர்கள் பயணிக்க வாரண்ட் வேண்டும். இல்லாத பட்சத்தில் டிக்கெட் எடுக்க வேண்டும் என கண்டக்டர் கூறியுள்ளார்.

ஆனால் அந்த போலீஸ்காரர் டிக்கெட் எடுக்க மறுத்ததோடு, எல்லோருக்கும் ஒரே விதிமுறைகளைகொண்டு வாருங்கள். போக்குவரத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மட்டும் இலவசம். நாங்களும் அரசு வேலை பார்ப்பவர்கள் தான். எங்களையும் இலவசமாக நீங்கள் பயணிக்க விட வேண்டும் என கூறி தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வைரலாகி வருகிறது.

இந்த வீடியோவில் உள்ள போலீஸ்காரர் குறித்து விசாரணை நடத்த நெல்லை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் உத்தரவிட்டார். அதன்பேரில் நடந்த விசாரணையில் சம்பந்தப்பட்ட போலீஸ்காரர் சென்னை ஆயுதப்படையில் வேலைப்பார்த்து வரும்விருதுநகரைசேர்ந்த ஆறுமுகபாண்டி என்பது தெரியவந்தது.

இவர் ஒரு வழக்கு தொடர்பாக நாங்குநேரி கோர்ட்டுக்கு வந்துவிட்டு சென்றபோது கண்டக்டருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இதுதொடர்பாக போலீஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜீப்கார் நேருக்கு நேர் மோதி 2 பெண்கள் பலி

நெல்லை, மே. 24

நெல்லை மாவட்டம் உவரி அருகே உள்ள தெற்கு புலிமான்குளம் மெயின் ரோட்டை சேர்ந்தவர் விஜயகுமார்(வயது 42). இவர் இறந்துபோன தனது தந்தை முருகேசனுக்கு திதி கொடுப்பதற்காக தனது தாய், மனைவி, குழந்தைகள் மற்றும் உறவினர்களுடன் ஒரு ஜீப் வாகனத்தில் இன்று அதிகாலையில் கன்னியாகுமரி புறப்பட்டு சென்றுள்ளார். அதனை உவரி அருகே சொக்கலிங்கபுரத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் ஓட்டிச் சென்றார்.

கூடங்குளம் அருகே கிழக்கு கடற்கரை சாலையில் தோட்டவிளையை கடந்து ஜீப் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த சொகுசுகார் எதிர்பாராதவிதமாக ஜீப்பின் மீது நேருக்கு நேராக மோதியது. இதில் ஜீப்பில் பயணித்த விஜயகுமாரின் மனைவி சந்தனகுமாரி (38), விஜயகுமாரின்சகோதரி முத்துச்செல்வி (32) ஆகிய 2 பேருக்கும் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு உயிருக்கு போராடிக்கொண்டிருந்தனர்.

மேலும் அதில் பயணித்த விஜயகுமார், அவரது தாயார் சரஸ்வதி (60), இளவரசன் (14), சம்போ (8), தமிழ் செல்வி (46), ஹரினி (13), கனிஷ்கா (13), பாக்கியவதி (56), ராஜேந்திரன் (50) ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த கூடங்குளம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். உயிருக்கு போராடிக்கொண்டிருந்த 11 பேரையும் மீட்டு கூடங்குளம் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். ஆனால் அங்கு செல்லும் வழியிலேயே சந்தனகுமாரியும், முத்துச்செல்வியும் பரிதாபமாக இறந்தனர். மற்ற 9 பேருக்கும் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இதுகுறித்து கூடங்குளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கனமழையினால் குளம் போல் காட்சியளிக்கும் கன்னியாகுமரி கடற்கரை

கன்னியாகுமரி, மே. 24


குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பரவலாக கனமழை பெய்து வருகிறது. சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியிலும் மழை கொட்டி வருகிறது. இந்த தொடர் மழையின் காரணமாக கன்னியாகுமரிக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அடியோடு குறைந்து விட்டது.

கடந்த 4 நாட்களாக மழை மற்றும் மேக மூட்டத்தினால் அதிகாலை வேளையில் சூரியன் உதயமாகும் காட்சியும், மாலை நேரங்களில் சூரியன் மறையும் காட்சியும் தெளிவாக தெரியவில்லை. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்து வருகின்றனர். தொடர் மழையின் காரணமாக கன்னியாகுமரியில் பயங்கர கடல் சீற்றம் ஏற்படுகிறது. இந்த கடல் சீற்றத்தினாலும் தொடர் மழையினாலும் கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு இடையே படகு போக்குவரத்து ரத்து செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலித் துறை கடற்கரை பகுதியில் கனமழையின் காரணமாக கடற்கரை பகுதியில் மழைநீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது. இதனால் கன்னியாகுமரி முக்கடல் சங்கமம் கடற்கரை பகுதிக்கு செல்ல முடியாமல் சுற்றுலா பயணிகள் அவதிப்படுகின்றனர்.

எனவே கன்னியாகுமரி கடற்கரையில் குளம் போல் தேங்கி நிற்கும் மழை நீரை அகற்ற மாவட்ட நிர்வாகம், கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி நிர்வாகம் மற்றும் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் நிர்வாகமும் அதிரடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தீரஜ் நடிப்பில் உருவாகி வரும் 'பிள்ளையார் சுழி'



"டபுள் டக்கர்" படத்தின் பெரும் வெற்றியைத் தொடர்ந்து, நடிகர் தீராஜ் நடிப்பில் உருவாகி இருக்கும் புதிய படம் "பிள்ளையார் சுழி." மணோகரன் பெரியதம்பி இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து, இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

சிலம்பரசி மற்றும் எயர் ஃப்ளிக்ஸ் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தின் கதை மாற்று திறனாளி குழந்தையின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட உருவாக்கப்பட்டு இருப்பதாக இயக்குநர் தெரிவித்துள்ளார். தீராஜ் முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்க, அபிநயா அவருடன் இணைந்து நடித்துள்ளார்.

இந்தப் படத்தில் ரேவதி, மைம் கோபி, மத்தியு வர்கீஸ், பவர் ஸ்டார் ஸ்ரீனிவாசன், தர்ஷன், ஜீவா ரவி, பழனி தேவி, ஆர்ஜே மகாலட்சுமி மற்றும் பலர் நடித்துள்ளனர். குழந்தை நட்சத்திரங்கள் உண்ணி கிருஷ்ணன், ஆர்னா, ஃபர்ஹானா, மற்றும் ஸ்ரீ ஷரவண் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்,

பிள்ளையார் சுழி படத்திற்கு பிரசாத் ஒளிப்பதிவாளராகவும், ஹரி எஸ்.ஆர். இசையமைப்பாளராகவும், ரேஷ்மன் குமார், மோகன்ராஜன், மற்றும் கோதை தேவி ஆகியோர் பாடல் வரிகளை எழுதியுள்ளனர். பிள்ளையார் சுழி நியூயார்க் திரைப்பட விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்டு சமீபத்தில் இறுதிச் சுற்றில் இடம் பிடித்தது.

# புதிய படத்தில் இணையும் கவின் நயன்தாரா




தமிழ் திரையுலகில் லிப்ட், டாடா மற்றும் ஸ்டார் என தொடர்ந்து வெற்றி படங்களை கொடுத்தவர் நடிகர் கவின். சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்துள்ள நடிகர் கவின் அடுத்தடுத்து புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி வருகிறார்.

அந்த வரிசையில், ஸ்டார் படத்தை தொடர்ந்து இயக்குநர் நெல்சன் தயாரிக்கும் பிளடி பகர் படத்திலும், அருன் இயக்கும் ஊர் குருவி படத்திலும் நடிக்க இருக்கிறார். இந்த நிலையில், கவின் நடிக்கும் அடுத்த படத்தை 7 ஸ்கிரீன் ஸ்டூடியோ நிறுவனம் தயாரிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த படத்தில் கவின் ஜோடியாக நயன்தாரா நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த படத்தை எழுத்தாளரும், பாடலாசிரியருமான விஷ்னு ஏதாவன் இயக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக விஷ்னு ஏதாவன் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியான கைதி, மாஸ்டர் மற்றும் விக்ரம் போன்ற படங்களில் இணை இயக்குநராக பணியாற்றி உள்ளார். இதுதவிர லியோ மற்றும் டாடா படங்களில் இடம்பெற்ற பாடல்களை எழுதியுள்ளார்.

# நேரு ஸ்டேடியத்தில் இந்தியன் 2 இசை வெளியீடு... கலந்து கொள்ளும் 2 சூப்பர்ஸ்டார்கள்




பிரம்மாண்ட இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் 1996 ம் ஆண்டில் நடிகர் கமல்ஹாசன் இரட்டை வேடத்தில் நடித்து வெளியான படம் 'இந்தியன்'. இப்படம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு பெற்று வசூல் சாதனை புரிந்தது.

இப்படத்தில் நடிகர் கமலுக்கு ஜோடியாக மனிஷா கொய்ராலா நடித்திருந்தார். மேலும் சுகன்யா, கஸ்தூரி, கவுண்டமணி, செந்தில் என பலர் நடித்து இருந்தனர்.இதில் கமல் இந்தியன் தாத்தா வேடத்தில் எதிரிகளை அழிப்பது ரசிகர்களிடம் வரவேற்பு பெற்றது.

இதை தொடர்ந்து தற்போது 28 ஆண்டுகளுக்கு பிறகு 'இந்தியன் 2 ' படத்தை இயக்குநர் ஷங்கர் எடுத்துள்ளார். இப்படத்தில் கமலுக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங், சித்தார்த், பாபி சிம்ஹா, சமுத்திரக்கனி என பலர் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு அனிருத் இசையமைத்து உள்ளார். லைகா மற்றும் ரெட் ஜெய்ண்ட் நிறுவனம் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது. இந்நிலையில், இந்தியன் 2 படத்தின் முதல் பாடல் "பாரா" வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதனிடையே இந்தியன் 2 படத்தின் இசை வெளியீட்டு விழா குறித்து தற்போது தகவல் வெளியாகி உள்ளது. இப்படத்தின் பிரம்மாண்ட இசை வெளியீட்டு விழா வருகிற ஜூன் 1 ஆம் தேதி சென்னையில் உள்ள நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சிரஞ்சீவி, ராம் சரண் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சங்கரின் இயக்கத்தில் உருவாகி வரும் "கேம் சேஞ்சர்" திரைப்படத்தில் ராம் சரண் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராயன் படத்தின் கானா பாடல் வெளியீட்டு அப்டேட்



திரையுலகின் முன்னணி நடிகர் தனுஷ். நடிப்பை கடந்து பின்னணி பாடகர், பாடலாசிரியர் மற்றும் இயக்குநர் என பல பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறார். தனுஷ் நடிப்பில் உருவாகும் 50 ஆவது படத்தை அவரே இயக்கி, நடித்து வருகிறார். ராயன் என்ற தலைப்பில் உருவாகி வரும் இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கும் இந்த படத்தின் முதல் பாடல் சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், இந்த படத்தின் அடுத்த பாடல் மே 24 ஆம் தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்து இருக்கிறது. இது கானா பாடலாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.


ராயன் படத்தின் இரண்டாவது பாடல் வெளியீட்டை அறிவிக்கும் போஸ்டரில் சந்தீப் கிஷன் மற்றும் அபர்ணா பாலமுரளி சைக்கிளில் செல்லும் புகைப்படம் உள்ளது. இந்த போஸ்டர் தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

# டிரீம் வாரியர் பிக்சர்ஸ்இன் புதிய படம் ரிலீஸ் அப்டேட் வெளியீடு




தமிழ் திரையுலகில் சகுனி, ஜோக்கர், காஷ்மோரா, கூட்டத்தில் ஒருத்தன், தீரன் அதிகாரம் ஒன்று, அருவி, என்.ஜி.கே., ராட்சசி, கைதி, சுல்தான், ஓ2, வட்டம் என பல படங்களை தயாரித்த முன்னணி நிறுவனம் டிரீம் வாரியர் பிக்சர்ஸ். வித்தியாசமான கதைகளை தேர்வு செய்து தயாரித்து வரும் டிரீம் வாரியர் பிக்சர்ஸ், தான் தயாரித்துள்ள புதிய படத்தின் டைட்டில் மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருக்கிறது. இந்த படம் ஜூன் மாதம் திரையரங்குகளில் வெளியாகும் என்று தெரிவித்துள்ளது. இவைதவிர, புதிய படத்தின் இயக்குநர், நடிகர், நடிகைகள் என வேறு எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

# ஹவுஸ்புல் 5 படத்தில் இருந்து விலகிய அனில் கபூர்?




பிரபல பாலிவுட் நடிகரும், தயாரிப்பாளருமான அனில் கபூர், சிறப்பான கதைகளை தேர்வு செய்து ரசிகர்களை மகிழ்வித்து வருகிறார். இயக்குநர் தருண் மன்சுகானி இயக்கத்தில் உருவாகும் ஹவுஸ்புல் 5 படத்தில் அனில் கபூர் நடிக்க இருப்பதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், ஹவுஸ்புல் 5 படத்தில் இருந்து அனில் கபூர் விலகியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அனில் கபூர் கேட்ட சம்பளத்தை கொடுக்க தயாரிப்பாளர் சஜித் நதியத்வாலா ஒப்புக் கொள்ளாதது தான் அவர் படத்தில் இருந்து விலக காரணம் என்று கூறப்படுகிறது. அனில் கபூர் விலகியுள்ளதை அடுத்து நானா படேகரின் கதாபாத்திரத்திற்கு மாற்றங்கள் செய்யப்படும் என்று தெரிகிறது.

ஹவுஸ்புல் 5 படத்தில் அனில் கபூர் மற்றும் நானா படேகர் இடையே அதிக காட்சிகள் படமாக்கப்பட இருந்ததாகவும், இருவரை தொடர்புப்படுத்தி கதை நகரும் என்றும் கூறப்பட்டது. எனினும், ஹவுஸ்புல் 5 படத்தில் இருந்து அனில் கபூர் விலகியுள்ளதாக படக்குழு சார்பில் இதுவரை எந்த தகவலும் வழங்கப்படவில்லை.

பிரமாண்டமாக தயாராகும் ஹவுஸ்புல் 5 படத்தில் அக்ஷய் குமார், அபிஷேக் பச்சன், அர்ஜூன் ராம்பால் மற்றும் தர்மேந்திரா என பெரும் நட்சத்திர பட்டாளமே நடிக்க இருக்கிறது.

# ஐ.பி.எல். தொடரில் 8 ஆயிரம் ரன்கள்: விராட் கோலி புதிய சாதனை



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. நடப்பு ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முன்னேறியது.

இந்நிலையில், இன்று நடைபெறும் எலிமினேட்டர் சுற்றில் ராஜஸ்தான் ராயல்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதுகின்றன. டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, பெங்களூரு அணி முதலில் களமிறங்கியது. விராட் கோலி, டூ பிளசிஸ் இருவரும் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர்.

டூ பிளசிஸ் 17 ரன்னில் அவுட்டானார். விராட் கோலி ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடினார். ஐ.பி.எல். தொடரில் 8 ஆயிரம் ரன்கள் எடுத்த முதல் வீரர் விராட் கோலி என்ற சாதனை படைத்தார். இவருக்கு அடுத்த இடத்தில் ஷிகர் தவான் 6,769 ரன்கள் எடுத்துள்ளார்.

இதற்கிடையே, விராட் கோலி 33 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

# பாரா உலக தடகள சாம்பியன்ஷிப்: குண்டு எறிதல் போட்டியில் இந்திய வீரர் சச்சின் கிலாரி தங்கம் வென்றார்



ஜப்பானில் பாரா உலக தடகள சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற ஆண்களுக்கான குண்டு எறிதல் (F46 பிரிவு) போட்டியில் இந்திய வீரர் சச்சின சர்ஜிராவ் கிலாரி தங்கம் வென்று அசத்தினார். அவர் 16.30 மீட்டர் தூரத்திற்கு எறிந்தார். இது ஆசிய சாதனையாகும். இதற்கு முன்னதாக 16.21 மீட்டர் தூரம் வீசி ஆசிய சாதனையை இவர்தான் படைத்திருந்தார். தற்போது அவரது சாதனையை அவரே முறியடித்துள்ளார்.

இதன்மூலம் இந்தியா 11 பதக்கங்கள் பெறுள்ளது. இதில் ஐந்து தங்கப் பதக்கங்கள் அடங்கும். கடந்த முறை 3 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் வென்றிருந்தது. தற்போது இந்தியா அதைவிட அதிக பதக்கம் வென்றுள்ளது.

# ஐ.பி.எல். 2024 அனல் பறக்கும் எலிமினேட்டரில் டாஸ் வென்ற ராஜஸ்தான் பந்துவீச்சு தேர்வு



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. நடப்பு ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முன்னேறியது. அந்த வகையில், இன்று நடைபெறும் எலிமினேட்டர் சுற்றில் ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் ராயல் சேலஞ்ஞர்ஸ் பெங்களூரு அணிகள் மோதுகின்றன. இந்த போட்டியில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச்சு தேர்வு செய்துள்ளது. இந்த போட்டியில் வெற்றி பெறும் அணி மே 24 ஆம் தேதி நடைபெறும் குவாலிபையர் 2 சுற்று போட்டியில் ஐதராபாத் அணியை எதிர்கொள்ள வேண்டும். குவாலிபையர் 2 சுற்றில் வெற்றி பெறும் அணி மே 26 ஆம் தேதி நடைபெறும் இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணியை எதிர்கொள்ள இருக்கிறது.

# எதிர்பாராத ரன் அவுட்.. படியில் அமர்ந்து அழுத ராகுல் திரிபாதி வைரல் வீடியோ



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் லீக் போட்டிகள் நிறைவடைந்து குவாலிஃபையர் சுற்று போட்டி இன்று நடைபெற்றது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதிய இந்த போட்டியில் டாஸ் வென்ற ஐதராபாத் அணி முதலில் பேட்டிங் செய்தது. ஐதராபாத் அணிக்கு துவக்க வீரராக களமிறங்கிய டிராவிஸ் ஹெட் இந்த போட்டியிலும் ரன் ஏதும் எடுக்காமல் அவுட் ஆனார். இவருடன் களமிறங்கிய அபிஷேக் ஷர்மா 3 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ராகுல் திரிபாதி சிறப்பாக ஆடி ரன்களை சேர்த்து வந்தார். ஒருபுறம் விக்கெட்டுகள் சரிந்த நிலையிலும், ராகுல் திரிபாதி ரன் குவிப்பில் கவனம் செலுத்தி வந்தார். 13 ஓவரில் இரண்டாவது பந்தை எதிர்கொண்ட சமத் அதனை ஆஃப் சைடில் விளாசினார். சமத் விளாசிய பந்தை ஆண்ட்ரே ரசல் சிறப்பாக பிடித்துக் கொண்டார். இதனிடையே ரன் ஓடலாமா, வேண்டாமா என்ற குழப்பத்தில் சமத் ஒருபுறமும், திரிபாதி ஒருபுறமும் நின்றனர். பிறகு ராகுல் ஓட துவங்கியதாக நினைத்த சமத் மறுபுறம் கிரீசை கடந்து விட்டார். இதைத் தொடர்ந்து ரன் ஓட துவங்கிய ராகுல் திரிபாதி நடுவில் தடுமாறி நிற்க, ரசல் துரிதமாக செயல்பட்டு பந்தை விக்கெட் கீப்பருக்கு அனுப்ப, ராகுல் திரிபாதி ரன் அவுட் ஆகி வெளியேறினார். எதிர்பாராத ரன் அவுட் காரணமாக மனமுடைந்த ராகுல் முகம் முழுக்க கவலையுடன் களத்தை விட்டு வெளியேறினார். டிரெசிங் ரூம் செல்லும் வழியில், உணர்ச்சிகள் பொங்கிய நிலையில் ராகுல் திரிபாதி படிக்கட்டில் அமர்ந்து முகத்தை மறைத்தப்படி சில நிமிடங்கள் அங்கேயே அமர்ந்து இருந்தார். தொடரின் மிகமுக்கிய போட்டியில் சிறப்பாக ஆடிய ராகுல் திரிபாதி, எதிர்பாராத விதமாக ரன் அவுட் ஆனதில் முகம் முழுக்க கவலையுடன் காணப்பட்டார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.



திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று

**விளக்கம்:**

தகுதி அல்லாதவைகளைத் தனக்குப் பிறர் செய்த போதிலும், அதனால், அவர்க்கு வரும் துன்பத்திற்காக நொந்து, அறம் அல்லாதவைகளைச் செய்யாதிருத்தல் நல்லது.

# இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளர் பதவிக்கு இவர் சரியாக இருப்பார்.. வாசிம் அக்ரம் சொல்வது என்ன?

இந்திய கிரிக்கெட் அணிக்கான பயிற்சியாளரை நியமிக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. கேகேஆர் அணியின் பயிற்சியாளரும், முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரருமான கௌதம் கம்பீர், ராகுல் டிராவிட்டிற்குப் பிறகு இந்தியாவின் அடுத்த பயிற்சியாளராக வருவதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதாக பிசிசிஐ வட்டாரங்களில் கூறப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் கேப்டன் வாசிம் அக்ரம், அடுத்த இந்திய அணி பயிற்சியாளராக கவுதம் கம்பீரை நியமிப்பதன் சாதக பாதகங்களை குறித்து மனம் திறந்துள்ளார். ஸ்போர்ட்ஸ் கீடா நிகழ்ச்சி ஒன்றில் வாசிம் பேசுகையில், கம்பீர் எளிமையாகவும் நேர்மையாகவும் இருப்பவர் அதே நேரம், அப்பட்டமாக உள்ளதை உள்ளபடி வெளிப்படையாக பேசக்கூடியவர், எதையும் இருமுறை யோசிக்காமல் பேசுவார்.

இது இந்திய கிரிக்கெட் கலாச்சாரத்தில் இல்லாத ஒரு குணமாகும். சில நேரங்களில் ஆக்ரோஷமாகவும் இருப்பார், இந்திய பயிற்சியாளர் பதவிக்கு அவர் சிறந்தவராக இருப்பார். அவர் இந்த பதவியை ஏற்றுக்கொள்வாரா என்று நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

விவிஎஸ் லக்ஷ்மண் அல்லது ஆஷிஷ் நெஹ்ரா இந்திய அணி பயிற்சியாளர் பொறுப்புக்கு பொருத்தமாக இருப்பார்களா என்பது குறித்தும் வாசிம் அக்ரம் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். தனது பபேட்டியில் அவர், நானும் வேறு சில பெயர்களைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு நிறைய அனுபவம் உள்ளது.

ஆசிஷ் நெஹ்ராவை சுற்றியிருக்க அனைவரும் விரும்புவர். மேலும் லக்ஷ்மன் சிறந்த மனிதர். அவர் என்சிஏ தலைவர், 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கட் அணியின் பயிற்சியாளராக பணியாற்றிய அனுபவம் அவருக்கு கைகொடுக்கும் என்று தெரிவித்துள்ளார்.



நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.